பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 13 வெள்ளிக்கிழமை (29.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 304

### பேச்சுகளை மீள ஆரம்பிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட

# நோர்வேயின் விசேட தூதுவர் போவர் ஞாயிறன்று கொழும்புக்கு வருகிறார்

## கிளிநொச்சிக்கும் செல்வார்



கொழும்பு, செப்ரெம்பர் 29

**சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய அடித்தள வேலைகளைக் கவனிப்பதற்காக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வரவிருக்கிறார் எனத் தெரியவருகிறது.**

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு நடைபெறும் 'நேர்மையான பேச்சுக்களில்' தமது இயக்கம் ஈடுபடுவதற்குத் தயாராகவே இருக்கிறது என்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமிருந்து சாதகமான சமிக்ஞை கிடைத்திருப்பதாகக் கடந்த புதன்கிழமை இலங்கை அரசு அறிவித்திருந்தது. இதனையடுத்தே, நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவரின் கொழும்பு விஜயம் பற்றிய செய்தி வெளியாகியிருக்கிறது.

ஞாயிறன்று கொழும்பு வரும் விசேட சமாதானத் தூதுவர், முதலில் அரசுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார். பின்னர், கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசி சமாதானப் பேச்சுக்களை எங்கே, எப்பொழுது நடத்துவது என்பது தொடர்பாக அவர்களின் உள்ளக் கிடக்கையைத் தெரிந்துகொள்வார். அவர்களுக்குச் சாத்தியமான இடங்கள், திகதி களையும் கேட்டறிந்து கொள்வார் என இராஜ தந்திர வட்டாரங்கள் கூறின. (06 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனுக்கு வெண்ணிறச் சால்வை குரு ரவிசங்கர் பரிசாகக் கொடுத்தார்



புதுடில்லி, செப். 29

'வாழும்கலை' நிறுவுநர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் கடந்த வாரம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த சமயம் வெண்ணிறச் சால்வை ஒன்றைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

குரு ரவிசங்கரின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை 'ஐ.ஏ.என்.எஸ்.' செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை உட்பட உலகெங்கும் ஆன்மீகப் பயணங்களை மேற்கொள்ளும் சுவாமி குரு ரவிசங்கர் தாம் விஜயம் செய்யும் இடங்களில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் வெண் (06 ஆம் பக்கம் பார்க்க)



## பேச்சு மூலம் அமைதித் தீர்வு அமெரிக்காவின் விருப்பம் இது

### கருணாநிதியிடம் அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

சென்னை, செப்.29

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியுடன் இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் டேவிட் சி.முல்போர்ட் ஆலோசனை நடத்தினார். கருணாநிதியின் கோபாலபுரம் இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை இச்சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் டேவிட் சி முல்போர்ட் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுகள் மூலமாக அமைதித் தீர்வை ஏற்படுத்துவதில் அமெரிக்கா தொடர்ந்து நம்பிக்கையோடு உள்ளது.

அமைதிப் பேச்சுகளுக்கான முன்னெடுப்பு (06 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது நாளாக நேற்றும் சபையில் தமிழ்க் கூட்டமைப்பினர் சத்தியாக்கிரகம்

### வடக்கு - கிழக்கில் சுமுகநிலை ஏற்படுத்தப்படும்வரை தொடருமா?

கொழும்பு, செப்.29

"வடக்கில் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள அசாதாரண நிலை மற்றும் பொருளாதாரத் தடை போன்றவை நீக்கப்படும் வரை- ஏ-9 உட்பட வடக்கு - கிழக்கில் உள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் தொடர்புபடுத்துகின்ற அனைத்துப் பாதைகளும் திறக்கப்படும் வரை - அதற்கான சாதகமான பதில் அரசிட மிருந்து கிடைக்கும் வரை எமது சத்தியாக்கிரகப் போராட்டம் நாடாளுமன்றில் தொடரும்."

-இவ்வாறு கூறியவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் கறுப்புப் பட்டி (06 ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளியில் விடுதிப் பணியாளர் சுட்டுக்கொலை

கிண்ணியா, செப்.29

திருமலை நிலாவெளியில் உல்லாசப் பயணிகள் விடுதியொன்றின் ஊழியர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 10 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் கோபாலபுரம் 10ஆம் கட்டையைச் சேர்ந்த (06 ஆம் பக்கம் பார்க்க)



## யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக இருதரப்புகள் மீதும் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.29

கடந்த ஜூலை மாதம் 22ஆம் திகதி விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த மாவிலாறு அணைக்கட்டின் கதவுகளை மூடியதில் இருந்து இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற இரண்டு மாதகால மோதல்களின்போது, சுமார் 300 சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு மாதகாலப் பகுதியில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே, வடக்கு- கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற நேரடி மோதல்கள் குறித்த தனது தீர்ப்பினை 5 பக்கங்களில் அறிக்கையாக வெளியிட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர், மேஜர் ஜெனரல் லாஸ் ஜொகான் சொல்வ் (06 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயரை அவமதித்தார் வீரவன்ஸ மன்னிப்புக் கோரக் கேட்கிறார் அமரதுங்க

கொழும்பு, செப் 29

மன்னார் ஆயர் அதி வண இராயப்பு ஜோசப் ஆண்டகை தொடர்பாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ அண்மையில் தெரிவித்த கருத்துக்கு ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதற்காக கத்தோலிக்க மக்களிடம் விமல் வீரவன்ஸ மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவில் கொலை குறித்த ஹக்கீமின் உரையை நாடாளுமன்றத்தில் நேற்று செவிமடுத்தார் ஜனாதிபதி

கொழும்பு, செப். 29

பொத்துவிலில் 10 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றில் ஆற்றிய காரசாரமான உரையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் உள்ள அவரது அலுவலகத்தில் இருந்து மிகக் கவனமாகச் செவிமடுத்தார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் சிற்றுண்டிச்சாலையில் ஹக்கீமைச் சந்தித்த ஜனாதிபதி பொத்துவில் சம்பவம் தொடர்பாக அவருடன் பேச ஹக்கீமுக்குத் திகதி ஒதுக்கித் தருவதாகக் கூறியிருக்கிறார்.

இந்தத்தகவலை ரவூப் (06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றில் எம்.பியின் கேள்விக்கு பதிலளிக்க மேர்வின் சில்வா மறுப்பு!

## தொண்டையில் மீன்முள்ளு குத்தியதாகக் காரணம்

கொழும்பு, செப்.29

நாடாளுமன்றத்தில் நேற்று தொழிற் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவைப் பார்த்து ஐ.தே.கட்சியின் எம்.பி யான தயாசிறி விஜேசேகர கேள்வி ஒன்றை எழுப்பினார் அப்போது அந்தக் கேள்விக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார் மேர்வின் சில்வா.

''எனது தொண்டையில் மீன் முள் சிக்கியிருப்பதால் என்னால் பதிலளிக்க முடியாது'' என்று கூறிவிட்டு பேசாமல் இருந்துவிட்டார் அவர்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது. வாய்ப்பே கிடைக்காததால் கேள்வி நேரத்தின் போது குருநாகல் மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி.தயாசிறி விஜேசேகர மலேஷியாவுக்கு தொழில் வாய்ப்புக்குச் சென்றோர் குறித்து கேள்வியொன்றை எழுப்பியிருந்தார்.

தொழில், தொழில் பயிற்சி அமைச்சு இளைஞர்களிடம் பெருந்தொகை பணத்தை பெற்றுக்கொண்டு அவர்களை தொழில் நிமித்தம் மலேஷியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. அவர்கள் அங்கு தொழில் செய்ய முடியாத நிலையில் இலங்கை திரும்பியுள்ளனர். இவர்கள் பெற்றுள்ள வங்கிக்கடனை செலுத்த முடியாமல் தடுமாறுகின்றனர். இது குறித்து அமைச்சு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென தயாசிறி விஜேசேகர கேள்வி எழுப்பியிருந்தார். இந்தக் கேள்விக்கே பிரதியமைச்சர் மேர்வின் சில்வா பதிலளிக்க முடியாதென்றார்.

குருநாகல் மாவட்ட ஜே.வி.பி. உறுப்பினர் விமல் ரத்நாயக்க இச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டார். எமது மாவட்டத்திலேயே அதிகமான இளைஞர்கள் மலேஷியா சென்று திரும்பியுள்ளனர். எனவே இது குறித்து அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

இந்த நிலையில், பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா உரிய பதிலை அளிக்காததால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது. இறுதியில் சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இது குறித்து அரசு முறையாக கவனம் செலுத்தும் என உறுதியளித்ததை அடுத்து சர்ச்சை முடிவுக்கு வந்தது.

(த)

# வடக்கு - கிழக்கு அவலங்களுக்கு அரசும், புலிகளுமே முழுக்காரணம்

## சங்கரி - சித்தார்த்தன் - சுகு மூவரும் குற்றச்சாட்டு

புதுடில்லி, செப்.29

வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற மக்கள் அனுபவிக்கும் அவலங்களுக்கு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளுமே காரணம். இனப்பிரச்சினைத் தீர்வின்றி நீடிப்பதற்கும் வன்செயல் சம்பவங்கள் பெருகுவதற்குமான பொறுப்பை இந்த இரு தரப்புமே ஏற்க வேண்டும் என்றும் புதுடில்லி வந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி. ஆனந்தசங்கரி, 'புளொட்' தலைவர் த. சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் ரி. சிறிதரன் (சுகு) ஆகிய மூவரும் தங்களைச் சந்தித்துப் பேசிய இந்திய அரசியல் தலைவர்களிடமும், அரச உயர் அதிகாரிகளிடமும் தெரிவித்திருக்கிறார்கள்.

பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாக வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு இருந்து வரும் அக்கறையையும், கரிசனையையும் இவர்களைச் சந்தித்த வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஈ. அஹம்மது, வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண் ஆகியோர் தவறாது வெளிக்காட்டியுள்ளனர். இலங்கையில் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்குமிடையே இனப்பிரச்சினைத் தீர்வு விடயத் தில் பொது இணக்கப்பாடொன்றைக் கொண்டு வருவதற்கு படாடோபம் எதுவுமின்றி இந்தியா பாடுபட்டு வருவதையும் இந்திய அதிகாரிகள் இந்தத் தமிழ்ப் பிரதி நிதிகளிடம் கூறியும் இருக்கின்றனராம்.

சமஷ்டி ஆட்சி முறையிலான ஒரு கட்டமைப்பின் கீழ் நியாயமான தீர்வு தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பாகவும் இருந்து வருகிறது என்றும் இந்திய அதிகாரிகள் இவர்களிடம் தெரிவிக்கத் தவறவில்லை என் அறியப்படுகிறது.

# டீசல் விலையை மேலும் குறைக்க அரசைக் கோருகின்றது பஸ் சங்கம்

கொழும்பு, செப்.29

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இம்மாத இறுதிக்குள் டீசலின் விலையை 4 ரூபா 50 சதத்தால் குறைக்க வேண்டும் இல்லையேல் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மாற்று நடவடிக்கையில் ஈடுபடும் என்று சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இம் மாத இறுதிக்குள் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படாவிட்டால் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக பஸ் உரிமையாளர் சங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த நிலையில், உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைக்கப்பட்டதால் நேற்றுமுன்தினம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பெற்றோலின் விலை 2 ரூபாவாலும், டீசலின் விலை 2.50 சதத்தாலும் குறைக்கப்பட்டது.

இதன்படி, 101 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு லீற்றர் பெற்றோல் 99 ரூபாவாகவும், 67 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் டீசல் 64 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

எனினும், இவ்விலைக் குறைப்பு தமக்குப் போதாது எனத் தெரிவித்த பஸ் உரிமையாளர்கள், ஒரு லீற்றர் டீசலின் விலையை மேலும் 4 ரூபா 50 சதத்தால் குறைக்க வேண்டுமெனவும் கோரியிருக்கின்றனர்.

இது குறித்து போக்குவரத்துத் துறை, எரிபொருள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸியிடம் கேட்டபோது, ''எரிபொருளின் விலையை மேலும் குறைக்கும் திட்டம் எதுவும் இல்லை. தற்போது டீசல் விலை 2 ரூபா 50 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், அதற்காகத் தற்போதுள்ள பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டிய அவசியமில்லை'' என்று தெரிவித்தார்.

(த)

**உடன் தேவை**

கணனி இயக்குநர் தேவை.
Page Maker, Photo Shop, Corol drow
இத்தகைய தகைமை உடையோர் நேரில் வரவும்.
*நேரம்: 1 தொடக்கம் 3 மணிவரை*
*காலம்: 30.09.2006*
கந்தர்மடம்சந்தி, யாழ்ப்பாணம். (53994)

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 4.10.2006 புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களும், பெற்றோர்களும் கலந்துகொள்ளவும்.

**பொ.சுந்தரலிங்கம்** - **தலைவர்**
**க.ரவீந்திரா** - **செயலாளர்**

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி உஆம் கிளை
பொதுமுகாமையாளர்

**இராஜசிங்கம் சிவராமலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு, அவரால் பயனடைந்த வாடிக்கையாளர் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

**தம்பிஐயா அன்கோ,**
**தம்பி மகேந்திரா,**
**62/9 ஸ்ரான்லி வீதி.**

(53993)

**ஸ்ரீ தனுசிகன்**
**எலெக்ரிக் சென்ரர்**
**385, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## பங்கீட்டு அட்டை பெறுவதற்கு மக்கள் முண்டியடிப்பு

தென்மராட்சி,செப்.29

பங்கீட்டு அட்டைக்கு உலர்உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதால் இதுவரை பங்கீட்டு அட்டை பெற்றுக்கொள்ளாதவர்கள் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தினமும் முண்டியடிப்பதைக் காணமுடிகிறது.

அத்துடன், பங்கீட்டு அட்டைகளில் திருத் தஞ்செய்வோரும், புதிய பதிவுகளை மேற்கொள்வோரும் நீண்ட வரிசையில் நிற்பதையும் காண முடிகிறது.

இப்பணிக்கென பெரும் எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது.

**படிவங்கள்**

* இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு ஆள்சேர்த்தல்.
முடிவு திகதி 02.10.06
* சுகாதார அமைச்சில் நிலவும் வெற்றிடங்களுக்கு புதிதாக பயிலுநர்களைச் சேர்த்தல்.
I மருந்து வழங்குநர்
II மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
III பௌதீகவியலாளர்
IV எக்ஸ்ரே ஒளிப்பதிவாளர்
V தொழில்சார் குணப்படுத்துநர்
முடிவுதிகதி 15.10.06

# மரண அறிவித்தல்கள்

## ஞானப்பிரகாசம் ஏனெஸ்ற்

*[இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்]*



யாழ்ப்பாணம், டேவிற் வீதி, இலக்கம் 58இல் வசித்த ஞானப்பிரகாசம் ஏனெஸ்ற் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்) நேற்று (28.09.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காணிக்கையின் அன்புக் கணவரும் அமரர் ஞானப்பிரகாசம் - பெரியபிள்ளை தம்பதியரின் அருமை மகனும் அமரர் செபதேயு - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் பாக்கியவதி, விற்றோ, ராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் பிரளிஸ், ஏனெஸ்ற், பத்மா, பற்றீசியா ஆகியோரின் மைத்துனரும் குமார், சூரி, விஜயகுமார், சாந்தகுமார், தர்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஜனா, சூட்டி, ரெனிசியா, ஜெபர்சன் ஆகியோரின் அன்பு மாமனும் தேனுஜா, அனுசியா, டிலெக்சனா, பொம்பிடோ, றிசானா, பெறோஸ், சரண்யா, ஏனெஸ்ரினா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.09.2006) சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 9.30 மணிக்குப் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஆராதனையின் பின்னர் பரி.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***இல. 58, டேவிற் வீதி,***
***யாழ்ப்பாணம்.***

**தகவல்:**
**காணிக்கை (மனைவி)**

## திருமதி மகேஸ்வரி கந்தையா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தையா 27.09.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் (**Inspector of Labour, port Commission**) அன்பு மனைவியும் திருமதி பார்வதிதேவி இராஜேஸ்வரன் (பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு) அலுவலகம், இலங்கை மின்சார சபை), **Dr.** பசுபதிராஜா (அநுராதபுரம்) ஆகியோரின் அன்புத் தாயும் ந.இராஜேஸ்வரன், திருமதி **Dr.** பவானி பசுபதிராஜா (**DPDHS** வவுனியா), ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சபாரெத்தினம் (சபாஸ் ஸ்ரோர்ஸ்), காலஞ்சென்ற திருமதி தையல்நாயகி மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிருசன் (யாழ். இந்துக் கல்லூரி), சுவேதிகா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), கிருத்திகா (திருக்குடும்ப கன்னியர் மடம், வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***99, சிவன்கோவில் வடக்கு வீதி,***53995)
***வண்ணார்பண்ணை,***
***யாழ்ப்பாணம்.***

**தகவல்:**
**ந.இராஜேஸ்வரன்**
**(மருமகன்)**

## இளையதம்பி குஞ்சித்தம்பி (விஜயகாரன்)

வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளையதம்பி குஞ்சித்தம்பி 27.09.2006 காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2006) வெள்ளிக்கிழமை கரணவாய் தெற்கு கரவெட்டியில் அமைந்துள்ள அவரது மகள் (ஜெயா) வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் பூவரசம்திட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***கரணவாய் தெற்கு,***
***கரவெட்டி.***

**தகவல்:**
**ம.சிவகாந்தன் (மருமகன்)**

## ஆறுமுகம் நன்னித்தம்பி

*[இளைப்பாறிய வனஇலாகா உத்தியோகத்தர்]*

செருக்கப்புலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மயிலணி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நன்னித்தம்பி நேற்று (28.09.2006) வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் விதானையார் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், செருக்கப்புலத்தைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி (லண்டன்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜலஜா மற்றும் மனோராணி (கனடா), கிருஷா (பொஸ்வாரை), சறோஜா (கொழும்பு), சுசீலா (லண்டன்), வத்சலா (சுன்னாகம்), பிரதீபன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜா, மகேந்திரன், கதிர்காமநாதன், நிர்மலன், யோகரட்ணம், அனிந்திகா, சாவித்திரி, ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சீவாம்பிகை, கனகாம்பிகை, கனகசபை மற்றும் நகுலாம்பிகை, நவமணி காலஞ்சென்றவர்களான டாக்டர் செல்வரட்ணம், இராசநாயகம், ஞானசேகரம், சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கேசவரூபன், ஜீவேந்திரா, நித்தியா, நிரூபன், ஹரிகரன், ஹரிராம், ஹரிக் கிருஷ்ணா, றொசான், றோகான், தட்சினி, துஷாங்கன், சங்கீதன், கார்த்திக், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலணி,*
*சுன்னாகம்.*

**தகவல்:**
**வத்சலா யோகரட்ணம்**
(நந்தினி- மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல.செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ளோர் முகாம்களில் தொண்டர் சேவை என்ற கருப் பொருளிலான கருத்தரங்கொன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் நடத்தப்படவிருக்கின்றது.

ஒக்டோபர் 3ஆம் திகதியும் 5ஆம் திகதியும் காலை மாலை வேளைகளில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பல அறிஞர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (ப)

## நூல் நிலையத்திற்கு கதிரைகள் அன்பளிப்பு

தென்மராட்சி,செப்.29

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல் நிலையத்திற்கு பத்து கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வீ.எம்.கே. நிறுவனத்தினர் இவற்றினை வழங்கியதாக பொது நூல் நிலைய நூலகர் இ.தர்மலிங்கம் தெரிவித்தார். (ப)

## கிராம அலுவலர் அலுவலகங்கள் இடமாற்றம்

தென்மராட்சி,செப்.29

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களையடுத்து உசனில் இயங்கிய உசன், கரம்பகம் ஆகிய கிராம அலுவலர் அலுவலகங்கள் கொடிகாமத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் உள்ள கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் உசன், கரம்பகம் ஆகிய கிராம அலுவலர் அலுவலகங்கள் இயங்குவதாக இப் பிரிவுகளின் கிராம அலுவலர்கள் அறிவித்துள்ளனர். (ப)

## ஓய்வூதியர்களின் உறுதிச் சீட்டுகள் தபாலில் வரவில்லை

தென்மராட்சி,செப்.29

கப்பலில் கொண்டுவரப்பட்ட தபால் பொதிகளில் யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களின் செப்ரெம்பர் மாத ஓய்வூதிய உறுதிச் சீட்டுக்கள் கொண்டுவரப்படவில்லை என்று தெரிகின்றது.

ஓய்வூதிய வவுச்சர் மாத இறுதியிலாவது கிடைக்குமென எதிர்பார்த்த ஓய்வூதியர்கள் ஏமாற்றமடைந்ததாகவும் அடுத்த கப்பலில் தபால்கள் வரும்வரை காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தனர்.

பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருள்கள் பணமில்லாத தால் ஓய்வூதியர்கள் சிலர் இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரிவித்தனர். (ப)

## குடும்ப அட்டைக்கு மண்எண்ணெய்

நல்லூர்,செப்.29

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளான ஜே/106, ஜே/107, ஜே/108, ஜே/109 மற்றும் ஜே/111, ஜே/112, ஜே/113 ஆகியவற்றிலுள்ளவர்களின் குடும்ப அட்டைகளுக்கு கல்வியங்காடு தேவகுருநாதன் எரிபொருள் நிலையத்தில் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த 7ஆம் திகதிக்குப் பின்னர் மண்எண்ணெய் பெற்றுக்கொண்டவர்களுக்கு அடுத்த மாதம் இரண்டு லீற்றர் மண்எண்ணெய் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (111-203)

## புள்ளிவிவரங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்து

தென்மராட்சி,செப்.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் வயது அடிப்படையிலான புள்ளி விவரங்களை இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு சகல கிராம அலுவலர்களையும் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீனிவாசகம் கேட்டுள்ளார். (203)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.29

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு புரட்டாதி மாதத்திற்கான ஞானச்சுடர் 105 ஆவது மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தொண்டைமானாறு வீரசிங்கம் ம.வி. ஆசிரியர் இரா.ஸ்ரீநடராசா வெளியீட்டுரையையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (203)

# வெளிமாவட்ட அரச அலுவலர்கள் இன்று கப்பலில் செல்வதற்கு ஏற்பாடு

### பயண ஏற்பாட்டுடன் வருகைதருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப். 29

குடாநாட்டில் போக்குவரத்து வசதியின்றித் தங்கியுள்ள வெளிமாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு பயண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

எனவே, சம்பந்தப்பட்ட அரச அலுவலர்களை பயண ஏற்பாட்டுடன், இன்று காலை 9 மணிக்கு யாழ்.செயலக திட்டமிடல் செயலகத்துக்கு சமுகமளிக்குமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் மாகாண சபையில் பணிபுரியும் அரச அலுவலர்களை உடன் கடமைக்குத் திரும்பும்படி அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் கேட்டுள்ளனர் என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (1)

# விவசாயிகளுக்குப் பங்கீட்டு முறையில் மண்எண்ணெய் வழங்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு, செப் 29

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் விவசாயிகளுக்கு மண்எண்ணெய் அவசியம் தேவைப்படுவதாகவும், ஆகவே பங்கீட்டு அடிப்படையில் மண்எண்ணெய் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி.ரூபினி வரதலிங்கம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது இப்பிரதேச விவசாயிகள் காலபோக நெல் விதைப்பை ஆரம்பிக்கும் நிலையில் உள்ளார்கள். மழை பெய்யாததினால் கிணறுகளில் இருந்து நீர் பாய்ச்சியே விதைப்பு வேலைகளை இவர்களில் பலர் ஆரம்பிக்கவுள்ளனர். ஆகவே இதற்கும் ஏனைய விவசாயப் பயிர்களுக்கும் நீர் இறைக்க மண்எண்ணெய் அவசியம் தேவைப்படுவதாக பிரதேச செயலர் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ப-135)

# வடமராட்சியில் பாணுக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை

### போதியளவு கோதுமை மா கிடைப்பதில்லை என்று விசனம்

வடமராட்சி,செப்.29

வடமராட்சிப் பிரதேசத்தில் பாணுக்குத் தொடந்தும் பற்றாக்குறை நீடித்து வருகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள பேக்கரிகளுக்கு வழங்கப்படும் கோதுமை மா போதுமானதாக இல்லையென்றும் -

இதனால் நுகர்வோருக்குப் பற்றாக்குறை இன்றிப் பாண் விநியோகிக்க முடியாத நிலை இருப்பதாகவும் - வடமராட்சி பேக்கரி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 95 வீதமான பேக்கரி உரிமையாளர்கள் அங்கம் வகிப்பதாகவும் - சங்கத்தினால் தற்போது பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டுவரும் மாவின்அளவிலிருந்து மேலும் அரைவாசி அளவுக்குக் கூடுதலாக கோதுமை மாவினை வழங்கினால் பற்றாக்குறையின்றி நுகர்வோருக்குப் பாண் வழங்க முடியும் என்றும் - குறிப்பிட்ட பேக்கரி உரிமையாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

தற்போது வழங்கப்பட்டுவரும் கோதுமை மாவின் அளவை விட மேலும் அதிகரித்த அளவில் கோதுமை மாவினை வழங்க ஆவண செய்யுமாறு தமது சங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் - அந்த பேக்கரி உரிமையாளர் கூறினார். (173)

# சட்ட விரோதமாக மாடு வெட்டிய நபருக்கு ரூபா 10 ஆயிரம் அபராதம்

குருநகர் பகுதியில் சட்ட விரோதமாக மாடு வெட்டிய நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பசுமாடு ஒன்றை வெட்டி இறைச்சிக்கு விற்பனை செய்ததாக மாநகர சுகாதாரப் பரிசோதகரால் பிடிக்கப்பட்ட நபர் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன் ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபர் பசுமாட்டை வெட்டி அதன் வயிற்றில் இருந்த கன்றுக் குட்டியை வீசியதாகவும் -

கன்றுக் குட்டியைக் கண்டவர்கள் கொடுத்த தகவலை அடுத்து பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டார் என்றும்- நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், அபராதம் கட்டத் தவறினால் ஒரு வருட சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (1)

# காலபோக நெற்செய்கை தொடர்பாக தொல்புரம் பகுதியில் கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு, செப்.29

தொல்புரம் கமநல சேவைநிலைய பிரிவில் கால்போக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் கூட்டங்கள் விவசாயிகள் சம்மேளனப் பிரிவு ரீதியாக அண்மையில் நடத்தப்பட்டுள்ளன.

இப்பிரிவிலுள்ள எட்டு விவசாயிகள் சம்மேளனங்களில் நடத்தப்பட்ட கூட்டங்களில் விதை நெல்லைப் பெறுவது, மானிய விலையில் உரத்தைப் பெறுவது, களைகொல்லி மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றைப் பெறுவது தொடர்பாக விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் பற்றி ஆராயப்பட்டது.

விதை நெல் கைவசம் இல்லாத விவசாயிகளுக்கு விதை நெல்லை மேலதிகமாக்க் கையிருப்பில் வைத்திருக்கும் ஏனைய விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து கொடுப்பதற்கு விவசாயிகள் சம்மேளனங்கள் உதவ வேண்டும் என்று இக் கலந்துரையாடல் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய தொல்புரம் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சா. குகநேசன் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை விவசாயிகள் சம்மேளனங்களால் தத்தமது பகுதியில் கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பிடிப்பதற்கென நியமிக்கப்பட்ட நபர்களுக்கு அதற்கான உத்தியோக பூர்வ நியமனக் கடிதங்களையும் பெரும்பாக உத்தியோகத்தர் வழங்கினார். (ப-135)

# குழந்தைகள் பால்மாவிற்கு ஏற்பட்டுள்ள பெருந் தட்டுப்பாடு

யாழ்.குடாநாட்டில் குழந்தைகளுக்கான பால்மா வகைகளுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குழந்தை வளர்ப்புக்குப் பால்மாவை நம்பியுள்ள தாய்மார்கள் இதனால் பெரும் கவலையடைந்துள்ளனர். நோயாளிகளுக்கும் வயதானவர்களுக்கும் தேவைப்படும் கொழுப் பற்ற பால்மாவும் கடைகளில் கிடைப்பதாக இல்லை.

கூட்டுறவுச் சங்கங்கள், மருந்தகங்கள் மற்றும் இதர வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் ஏற்கனவே விற்றுத் தீர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் பசுப்பாலுக்கும் குடாநாட்டில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (ப-17)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், செப்.29

தற்போது பல்கலைக்கழக விடுதிகளுக்கு வெளியே வசிக்கும் யாழ்.பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்களை அவர்களது கப்பல் பயணத்துக்கான ஒழுங்குகள் குறித்து பல்கலைக்கழக மாணவர் நலன் சேவைகள் பிரிவில் உடனடியாக அறிந்துகொள்ளுமாறு பதில் துணைவேந்தர் கேட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.29

ஸ்ரீலங்கா தொழில் பயிற்சி அதிகார சபையினரால் யாழ்.அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வந்த தொழில் பயிற்சி நெறிகளைப் பூரணப்படுத்துவதற்கான கலந்துரையாடல் அடுத்த மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் நாவலர் வீதியிலுள்ள அதிகார சபையின் அலுவலகத்தில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் மாணவர்கள், போதனாசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு கணனி மென்பொருள், 10 மணிக்கு மோட்டார் சைக்கிள் திருத்துதல், 11 மணிக்கு வீட்டு மின்னிணைப்பு, 12 மணிக்கு அலுமினியம் பொருத்துகை ஆகியவற்றிற்கான கலந்துரையாடல்கள் இடம்பெறும். (ப)

## நவராத்திரியை முன்னிட்டு பயறு, சர்க்கரை விநியோகம்

தென்மராட்சி, செப் 29

நவராத்திரி விழாவினையொட்டி பயறு, சர்க்கரை ஆகிய பொருள்கள் தென்மராட்சிப் பிரதேச பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ்.செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப் பொருள்கள் சங்கக்கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சமுர்த்தி நிவாரணம்

மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் சமுர்த்தி முத்திரைக்கான நிவாரணம், அனர்த்த நிவாரணம், மீனவருக்கான நிவாரணம், வறுமையிலும் வறுமை நிவாரணம் ஆகிய நிவாரணங்கள் தற்போது சங்கக்கிளைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் 'உ' பங்கீட்டு அட்டைக்கு காசுக்கான அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியனவும் வழங்கப்பட்டு வருவதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (135)

## சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்தவர்களுக்கு கொழும்பிலிருந்து மருந்து

சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்தவர்களுக்கான மருந்துகள் யாழ். பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர்அலுவலகத்தினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் திணைக்களத்தில் மருந்துகளுக்கு ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு இன்றும், நாளையும் சுகாதாரத்திணைக்கள அலுவலகத்தில் வைத்து மருந்துகள் வழங்கப்படவுள்ளதாக பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (202)

## ஓடு பிரித்து இறங்கி சங்கக்கடையில் திருட்டு

வலி.தென்மேற்கு, செப் 29

இரவு வேளையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் மானிப்பாய் பிரதான வீதியிலுள்ள மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பதினொராம் இலக்கக் கிளையில் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடையின் கூரை ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த அரிசி, சீனி, பால்மா பக்கற்றுகள் உட்பட மற்றும் பல பொருள்களை திருடிச் சென்றுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வேளையில் நடைபெற்ற இத் திருட்டு சம்பவம் பற்றி மானிப்பாய் [illegible] யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. [illegible] ஸார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினர். (ப-135)

## ஒத்திவைப்பு

நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நீதிமன்றில் நடைபெறவிருந்த சிறுவர் இல்லப் பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று நீதிமன்றப் பதிவாளர் க.மீரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையை காரணமாக கலந்துரையாடல் குறித்த திகதியில் நடைபெறமாட்டாது எனவும் கலந்துரையாடல் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி புராதன தான்தோன்றி வாரிவனநாதர்
பழைய சிவன் கோயில்
கேதார கௌரி விரத விழா

விரத ஆரம்பம்: 01.10.2006 (ஞாயிற்றுக்கிழமை)

தினமும் விழா முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவுபெறும்.

காப்பு எடுக்கும் விரதகாரர்கள் ஆலயத்தில் பெயர், நட்சத்திரத்தைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இ.கருணாகரன்
தர்மகர்த்தா

(53985)



SANJEI Mobile Phone Technology

தற்காலிகமாக தடைப்பட்டிருந்த எமது
Mobile Repairing Course
வகுப்புகள்
மீள ஆரம்பம்
01.10.2006 at 9.00 a.m.
Arul Com
01, Brown Rd, J/F. 222 3536

(53983)



உடன்தேவை

சஞ்சிகை விநியோகஸ்தர்கள் (ஆண்/பெண்)
வயதெல்லை: 18 - 45, கல்வித் தகைமை: G.C.E. O/L
சம்பளம்: 6000 - 7000 வரை
விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

P.M.C 54/B, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(வேம்படிச் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில்)


## வெள்ளிவிழா நாயகன் வி.செல்வராஜன்
(பதவி நிலை உதவியாளர் தரம் - I இலங்கை வங்கி, சுன்னாகம்)



1981ஆம் அண்டு இலங்கை வங்கியில் இணைந்து 29.09.2006 இன்று தனது 25 வருடப் பணியை நிறைவு செய்து ஓய்வு பெறும் எம் அன்புக்குரிய

**திரு.வி.செல்வராஜன்**

அவர்களின் சேவை நலப் பாராட்டிற்கான இவ் வெளிப்பாட்டுக் கவிதையை இலங்கை வங்கி சுன்னாகம் பணியாளராகிய நாம் மனம் மகிழ்ந்து சமர்ப்பிக்கின்றோம்.

*வேலணையில் பூத்து வித்தகனாய்த் திகழ்ந்து*
*வேலணையின் இலங்கை வங்கிதனில் இணைந்து*
*காலமெலாம் கண்ணியனாய் கடமைதனை ஆற்றி*
*காலத்தின் கட்டளையால் எம் கிளையில் வெள்ளி விழா*
*சீலமுடன் காணும் செல்வராஜப் புண்ணியனே!*
*சாலவுன் குடும்பமொடு சீர்பலவும் பெறுதற்கு*
*பாலபிறைச் சடையோனின் பாதமலர் சூடுகிறோம்*
*பாரகத்தே பொலிவுடனே பல்லாண்டு வாழியவே!*

**முகாமையாளரும் ஊழியர்களும்,**
**இலங்கை வங்கி,**
சுன்னாகம்.

(53958)

## தவறிவிட்டது

25.09.2006 திருகோணமலையில் இருந்து யாழ். வந்து இறங்கிய வேளை (தெல்லிப்பழையில்) குருப்பட்ட விழா அழைப்பிதழ் மற்றும் செபமாலைகள் அடங்கிய சூட்கேஸ் ஒன்று தவறிவிட்டது. அதனை கண்டெடுத்தவர்கள் கருணை கூர்ந்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

அருள் தந்தை பொஸ்கோ அடிகளார்
அருள் ஆச்சிரமம்
SKME இன் வாடி, நாவாந்துறை. கோவில் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 0214590115 T.P.:222 3351

## கல்வி நிர்வாக சேவை பெறுபேறுகள் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், செப்.29

கல்வி நிர்வாக சேவை (2005) பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் விசேட மற்றும் பொது ஆளணியினரை நியமிப்பதற்காக வரையறுத்த ரீதியில் நடைபெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் வகுப்பு 11 தரத்திற்குத் தோற்றியவர்களுக்கே பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ப-95)

## சுனாமி பாதித்தோருக்கு நான்காம் கட்ட உதவி

யாழ்ப்பாணம், செப்.29

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாதகலைச் சேர்ந்த 400 குடும்பங்களுக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை 4ஆம் கட்ட நிவாரணமாக 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளது.

மேலும் இவர்களுக்கு வழங்க வேண்டிய இருகட்ட கொடுப்பனவு அதற்கான பணம் வந்து சேர்ந்ததும் வழங்கப்படும் என்று வங்கியின் பொது முகாமையாளர் என்.ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

(100)

## தெல்லி.வைத்தியசாலைக்கு உள்ளகத் தொலைபேசி வசதி

குருநகர், செப்.29

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலை ஆகியவற்றுக்கு பல இணைப்புகளைக் கொண்ட உள்ளகத் தொலைபேசி இணைப்புகள் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர்ஆ.கேதீஸ்வரனின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டுள்ளன.

(ப-51)

## வீதியைத் திருத்த மக்கள் கோரிக்கை

நவாலி வடக்கு நாச்சிமார் ஆலய வீதி கடந்த 32 வருடங்களாகப் புனரமைப்பு செய்யப்படவில்லை.

கடந்த 1999 முதல் மேற்படி வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு கோரப்பட்டுவந்த போதிலும் இதுவரை வீதி திருத்தப்படவில்லையென்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ப-95)

## தேங்காய் விலை அதிகரிப்பு

தென்மராட்சியில் தேங்காயின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது. கொடிகாமம், சாவகச்சேரி சந்தைகளில் 25 ரூபா தொடக்கம் 35 ரூபா வரை அதிகரித்துள்ளது. இந்தச் சந்தைகளில் வியாபாரிகள் மொத்தமாகத் தேங்காயைக் கொள்வனவு செய்வதால் சிறிய தொகையில் மக்கள் தமது அன்றாட தேவைகளுக்குத் தேங்காயை [illegible] (ப-51)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

*மலர்வு 04 . 03 . 1935*



*உதிர்வு 30 . 08 . 2006*

**அமரர் குமாரசாமி கந்தசாமி (ஓடலி)**
(ஓய்வுபெற்ற மருத்துவ ஊழியர் - நயினாதீவு)

*30.08.2006 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் குமாரசாமி கந்தசாமி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (29.09.2006) வெள்ளிக்கிழமை காலை கங்காதாரணி தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வு முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.*

*எனவே அன்னாரின் ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

*'குகன் இல்லம்', 5ஆம் வட்டாரம், நயினாதீவு.* **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(53959)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



**அமரர் நாகநாதி காமாட்சி**

*31.08.2006 அன்று காலமாகிய நயினாதீவு 8ஆம் வட்டாரத்தில் வசித்த அமரர் நாகநாதி காமாட்சி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (30.09.2006) சனிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நயினாதீவு கெங்காதரணி தீர்த்தக் கரையிலும் நடைபெறும்.*

*உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் அறியத்தருகின்றேன்.*

தகவல்: **நா.கந்தசாமி**
(மகன் - கிராம அலுவலர்)

*நயினாதீவு.* (53978)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் அரியராசா

உடுவிலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் அரியராசா 27.09.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பையா இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் தெய்வநாயகியின் அன்புக் கணவரும் கஜேந்தியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ரத்தினம், தருமராசா, செல்வராசா, சத்தியேஸ்வரி மற்றும் புனிதராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (28.09.2006) வியாழக்கிழமை 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளை.**

(53974)

### சின்னக்குட்டி வீரசிங்கம்



இளவாலை, மாரிசன்கூடலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி வீரசிங்கம் அவர்கள் 28.09.2006 வியாழக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் பகவதி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தட்சினியின் அன்புத் தகப்பனும் கணபதிப்பிள்ளை, கதிரவேலு (ஆசிரியர்), செல்லத்துரை (விரிவுரையாளர்), செல்லம்மா (ஆசிரியர்), தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியமூர்த்தி, தவராசா, புவனேஸ்வரி,பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, நகுலேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கொக்குவில்.* (53976) **இராஜேஸ்வரி (மனைவி).**

### வேலுப்பிள்ளை சிவஞானசுந்தரம்



பெரிய நாவலடியைப் பிறப்பிடமாகவும் உசன் வடக்கு, மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவஞானசுந்தரம் 27.09.2006 அன்று காலமானார்.

அன்னார் கமலாட்சி இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகலா, சிவநேசன், சிவறகினி, சிவேந்திரன், சிவகெங்கா, சிவநந்தினி, சிவசோதி (அமரர்), சிவறஞ்சன் (அமரர்), சிவசேரன் (அமரர்), சிவதீஸ்வரன் (அமரர்), சிவகாந்தன், சிவகாந்தினி, சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசுதா, இராசலிங்கம் (இத்தாலி), றமேஸ்வரன் (கொழும்பு), கருணாகரன், ராஜன் (ஜேர்மனி), கார்த்திகா, ஜீவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் துளசிகா, துளக்ஷன், சிந்துஜா, விதுஷன், ஷர்மிகா, பிர்தீஸ், பீரவீன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று 28.09.2006 பிற்பகல் ஒரு மணிக்கு அவரது வடக்கு மிருசுவில் இல்லத்தில் நடைபெற்று களிக்கரை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வடக்கு மிருசுவில்.* (53973) **குடும்பத்தினர்.**

## 13 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ணசர்மா**
(குஞ்சுக்கிளி ஐயா -
*புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பரம்பரைக் குரு)*

*இன்று (29.09.2006) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஸ்ணசர்மா அவர்களின் 13ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா ஆயக்கடவையான் அடிசேர இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.* (53981) **இ.விக்னராசா குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# யுத்த நிறுத்தத்தைப் பேணாமல் அமைதி முயற்சிகள் சாத்தியமாகா

சமாதானப் பேச்சு தொடர்பாக புதிய நம்பிக்கை துளிர்க்கும் சாத்தியங்கள் தென்படுகின்றன; நம்பிக்கைக் கீற்றுத் தோற்றுகின்றது.

தடைப்பட்டுள்ள அரசு - புலிகள் சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடமிருந்து அரசுக்கு சமாதான சமிக்ஞைகள் கிடைத்திருக்கின்றன என இலங்கை அரசின் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கின்றார்.

எனினும், அந்த சமிக்ஞைகள் என்ன, எவை, எந்த வடிவத்தில் வந்துள்ளன என்ற விவரங்களை அவர் வெளியிடவில்லை.

எனினும், அமைதிப் பேச்சுக்களை விரைந்து ஆரம்பியுங்கள் என்ற அழுத்தம் - வலியுறுத்தல் - இலங்கைக்கு வெளியிலிருந்து பல மட்டங்களில் வந்துள்ள சூழ்நிலையில் -

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை அடங்கிய இணைத் தலைமைகள் மட்டுமன்றி இந்தியா உட்பட சர்வதேச சமூகமே ஒன்றுபட்டு, உனடியாக அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்கும்படி ஒரே குரலில் வற்புறுத்தி வரும் பின்னணியில் -

பேச்சுக்கு இணங்கும் சாதகமான பிரதிபலிப்புகளை தரப்புகள் வெளியிடுகின்றமை மக்கள் மத்தியில் சற்றேனும் நம்பிக்கையைத் தருவதாக உள்ளது.

இதேசமயம், அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பது குறித்து இரு தரப்புடனும் கலந்துரையாடுவதற்காகவும், அடிப்படை விடயங்களைக் கையாள்வதற்காகவும் நோர்வே அனுசரணைத் தரப்பின் சார்பில் இலங்கை விடயங்களைக் கையாளும் விசேட பிரதிநிதியான ஜோன் ஹன்ஸன் போவர் பெரும்பாலும் நாளை மறுதினம் கொழும்பு வருகின்றார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவர் கொழும்பில் அரசுத் தலைவர்களையும் பின்னர் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடல்களின் போது அரசுப் பிரதிநிதிகளுக்கும், புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அடுத்த சுற்றுப் பேச்சுக்களை எங்கு, எப்போது நடத்துவது என்பது பற்றிய விடயம் ஆராயப்பட்டு தீர்மானிக்கப்படலாம் எனக் கருதப்படுகின்றது.

இதேவேளை, தற்போதைய பாதுகாப்பு நிலைமை சீரடையுமானால் விசேட தூதுவர் ஹன்ஸன் போவரைத் தொடர்ந்து, நோர்வேயின் அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் இலங்கை வருவார் என்றும், அமைதி முயற்சிகளைத் தீவிரமாக முன்னெடுக்கும் முயற்சியாக கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் 'சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த' சந்திப்பு ஒன்றை நடத்த அவர் முயலுவார் என்றும் கூட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கைக்கு உதவும் அணிகளின் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் வாஷிங்டனில் நடைபெற்றதாகவும், அதையடுத்தே நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவர் மற்றும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் உடனடியாக இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டும் என்ற விவ்காரம் உட்பட இலங்கையில் அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய பல முன் நடவடிக்கைகள் குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டு தீர்மானிக்கப்பட்டதாகவும் அறியவருகின்றது.

சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் மீண்டும் அமைதி முயற்சிகளை முன்நகர்த்த இப்போது எடுக்கப்பட்டிருக்கும் பிந்திய முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் நகர்த்தப்பட வேண்டுமானால் - நகர வேண்டுமானால் - களத்தின் தற்போதைய நிலைமை மேலும் சீரடைய வேண்டும்.

முதலில், தற்போது வடக்கு - கிழக்கில், தமிழர் தாயகத்தில், மோதல்களாலும், வன்முறை அராஜகங்களினாலும் சீர்கெட்டிருக்கும் களநிலைமை மேலும் மோசமடையாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பின்னர் அதை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

அப்போதுதான் அமைதி முயற்சிகளும், சமாதானப் பேச்சுகளும் ஏதேனும் ஆக்கபூர்வமான பெறுபேறைத் தரக்கூடிய திசையில் நகர்வதற்கான வாய்ப்பும், சூழலும் ஏற்படும்.

களநிலைமை சீரடைய வேண்டுமானால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செம்மையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். யுத்த நிறுத்தம் செம்மையாகப் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றால், அது தொடர்பான ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் - அவற்றின் மூல அம்சங்கள் - முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படை சாராம்சத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தவும், கடைப்பிடிக்கவும் இரு தரப்புகளும் தயாரா என்பதே இன்றைய கேள்வியாகும்.

அதற்கு தரப்புகள் இணங்கினாலன்றி அமைதி முயற்சிகளை எவ்வாறு, எப்போது, எங்கு ஆரம்பித்தாலும் பயன்தரும் திசையில் அவை நகர மாட்டா என்பது நிச்சயம்.

யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துக்களை சொல்லிலும், செயலிலும் நடைமுறைப்படுத்தவும், கைக்கொள்ளவும் இரு தரப்புகளும் இணங்காமல், பேச்சை ஆரம்பிக்க இணக்கம் காண்பதில் அர்த்தமேயில்லை.

# தமிழ் எம்.பிக்களின் அமைதிப் போராட்டத்தை அரசு ஏன் இன்னும் கணக்கில் எடுக்கவில்லை?

## சபையைக் குழப்பினால்தான் நடவடிக்கை எடுப்பீர்களா என்று ஹக்கீம் கேள்வி



கொழும்பு, செப்.29

வடக்கு - கிழக்கில் சுமுக நிலையை ஏற்படுத்தக் கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நாடாளுமன்றில் அமைதியான முறையில் நடத்திவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை அரசு ஏன் இன்னும் கவனத்தில் எடுக்காமல் அப்போராட்டத்திற்கு ஒரு பதில் சொல்லாமல் இருக்கின்றது.?

அமைதியாகப் போராடுவதை விட்டுவிட்டு மிகவும் ஆக்ரோசமாக - ஆரவாரத்துடன் சபை நடவடிக்கைகளைக் குழப்பும் வகையில் போராட்டம் நடத்தினால்தான் அரசு கணக்கில் எடுக்குமா?

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தொடர்ந்து இரு நாள்களாக இந்தச் சபையில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் போராட்டத்தை அரசு கணக்கில் எடுக்காமல் அதை உதாசீனம் செய்து வருகிறது. இதற்கு ஒரு நல்ல பதிலை தர அரசு இன்னும் முன்வரவில்லை.

எனக்கு முன்பு பேசிய அமைச்சர் டீ.பி ஏக்கநாயக்க, இந்தப் போராட்டத்தை உதாசீனம் செய்யும் வகையில் பேசினார்.

இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமரைச் சந்திக்க முடியாமல் போனதால் மீண்டும் நாடு திரும்பி அமைதியான முறையில் இங்கு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் கூறினார்.

அப்படியென்றால் அரசு அவர்களின் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகிறதா? அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரேனும் சும்மாவேனும் இப்போராட்டத்தைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. கணக்கே எடுக்காமல் நடந்துகொள்கின்றனர்.

அமைதியான போராட்டத்தை விடுத்து ஆக்ரோஷமான முறையில் போராடினால்தான் அரசு கவனத்தில் எடுக்கமா? கடந்த காலங்களில் அமைதியான போராட்டங்கள் கொச்சைப் படுத்தப்பட்டதால் அவை வன்முறைகளாக மாறி நாட்டையே அழித்து வருகின்றது.

நான் இவ்வாறு பேசுவதால் புலிகளுக்கு வக்காலாத்து வாங்குகிறேன் என்று சொல்லக்கூடாது. நான் புலிகளின் மனித உரிமை மீறல்களை வன்மையாகக் கண்டிப்பவன்.

மூதூரில் புலிகள் மேற்கொண்ட மனித உரிமை மீறலை நான் மிகவும் வன்மையாகக் கண்டித்திருந்தேன். புலிகளின் தலைவர்கள் அவர்களுக்குக் கீழே உள்ள புலிகள் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டனர் என்று கூறியிருந்தேன்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சிறுபான்மை இனமக்களின் நலன்களுக்காக இவ்வாறு போரட்டத்தில் ஈடுபடுகின்றனர். நானும் சிறுபான்மை இனமக்களின் பெருபான்மையைப் பெற்ற ஏகப்பிரதிநிதி என்பதால் இதைக் கூறுகிறேன். எனது மக்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள் என்பதால் கூறுகிறேன்.

தற்போது நான் பிரநிதித்துவப் படுத்தும் எமது முஸ்லிம் மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். மூதூரில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சரியான முறையில் மீளக்குடியமர்த்தப்படாததால் அவர்கள் மீண்டும் இடம்பெயர வேண்டியேற்பட்டுள்ளது.

**தமிழ் மக்களை மீளக் குடியமர்த்துங்கள்!**

மூதூர் முஸ்லிம் மக்களிடையே இயல்பு நிலை ஏற்படுத்தப்படவில்லை. மூதூரில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதுதான் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் இயல்பு நிலையாகும். ஆகவே, தமிழ் மக்களும் மீள்குடியேற்றப்பட வேண்டும்.

இதுதவிர பொத்துவில் சம்பவம் இப்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. பொத்துவில் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த சர்வதேச விசாரணைக்குழு ஒன்று தேவை என நான் கூறியதால் நான் ஒரு தேசத்துரோகி போன்று பார்க்கப்படுகின்றேன்.

முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதியான நான் பொதுமக்கள் கொல்லப்படுகின்ற போது அது குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் எனக்கோரும் உரிமை எனக்கில்லையா?

அவ்வாறு நான் கோரிக்கை விட்டதன் காரணமாகவே எனது அதிரடிப்படை மெய்ப்பாதுகாவலர்களையும் அரசு மீளப்பெற்றுக்கொண்டது.

பொத்துவில் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் மேற்கொண்டுவரும் அமைதிப் போராட்டமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# கிண்ணியாவுக்கு இடம்பெயர்ந்த மூதூர் முஸ்லிம்கள் திரும்பினர்!

கிண்ணியா, செப். 29

கடந்த வாரம் வெளியிடப்பட்ட அநாமேதேய துண்டுப்பிரசுரத்தையடுத்து அச்சம் காரணமாக மூதூரிலிருந்து கிண்ணியாவுக்கு இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் நேற்றுக் காலை மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

கிண்ணியா அல் அக்ஸா ஜூனியர், சீனியர் மகா வித்தியாலயங்களிலும், மாஞ்சோலை முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயத்திலும் மற்றும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியிருந்த மக்கள் இவ்வாறு சென்றுள்ளனர்.

கிண்ணியா துறையடியிலிருந்து கடல் மார்க்கமாக சுமார் 10 இற்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகளில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் எனப் பலரும் மூதூர் சென்றனர்.

இவர்களுக்கான கடல்வழிப் பாதுகாப்பைக் கடற்படையினர் வழங்கி வருகின்றனர். குறிப்பிட்ட சில படகுகள் மட்டும் சேவையில் ஈடுபடுத்தப் படுவதனால் அப்படகுகள் திரும்பி வரும்வரைக்கும் கிண்ணியாத் துறையடியில் பலர் காத்துநின்றனர்.

இதேவேளை, மீதமாக இருக்கின்ற சிலர் மீண்டும் மூதூர் செல்ல மறுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

# மூதூரில் இடம்பெயர்ந்த தமிழர்களை மீளக்குடியமர்த்த இதயசுத்தியுடன் முயற்சி மேற்கொள்ளப்படும்

## நாடாளுமன்றில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்

கொழும்பு, செப். 29

மூதூரில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ்மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு இதயசுத்தியுடன் மேற்கொண்டு வருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்த விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

மூதூரில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்ததற்குப் பதிலளிக்கும் விதமாகவே அவர் இவ்வாறு கூறினார்.

மூதூரில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்ததுபோல் தமிழ் மக்களையும் மீளக்குடியமர்த்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நடவடிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உதவவேண்டும். முஸ்லிம்களைக் குடியமர்த்துகின்ற போதும் அவர்களுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும் அவைபற்றிக் குறை கூறாமல் கூட்டமைப்பினர் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

அதேபோல் தமிழ் மக்கள் மீளக் குடியமர்த்தப்படும்போதும் உரிய ஒத்துழைப்பை வழங்கவேண்டும். அவர்களுக்கான கட்டுமானப்பணி உட்பட அனைத்துத் தேவைகளையும் சுட்டிக்காட்டி அவற்றைச் செய்து முடிக்க எமக்கு முழு ஒத்துழைப்பைத் தரவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களை மிகவும் வெற்றிகரமாக குடியமர்த்த முடியும் - என்றார். (க)

# நலன்புரி நிலைய சிறார்களுக்கு பயன்பாட்டுப் பொருள்கள் கையளிப்பு

தென்மராட்சி, செப்.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட எறிகணைத் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களின் சிறார்களுக்கு உணவுப் பண்டம் அல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன.

யுனிசெப் நிறுவன சிபார்சுடன் யு.என்.ஓ.பி.எஸ். (UNITED NATIONS OFFICE PROJECT SCHEME) நிறுவனத்தினர் இப்பொருள்களை வழங்கினர்.

படுக்கை விரிப்புகள், சவர்க்கார வகைகள், பிளாஸ்ரிக் பாய்கள், துவாய்கள், பிளாஸ்ரிக் வாளிகள், தூரிகைகள் மற்றும் ஹார்பிக் பவுடர் ஆகிய பொருள்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப)

# மூதூரில் ஆயுதங்கள் மீட்பு

கிண்ணியா, செப்.29

மூதூர்ப் பகுதியில் சுகாதாரத் தொழிலாளர்கள் குடியிருப்புக்கு அண்மித்த சந்தியொன்றில் நேற்று முன்தினம் முற்பகல் கிளைமோர் குண்டுகள், கைக் குண்டுகள் மற்றும் வெடிபொருள்களை மூதூர் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தமக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றையடுத்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோதே இந்த வெடிபொருள்கள் மீட்டெடுக்கப் பட்டன என்று மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோக அட்டைக்கு தலா இரண்டு லீற்றர் பெற்றோல்

## பலாலியில் நடந்த மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப் 29

குடாநாட்டில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்ள் ஊடாக வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டைகளுக்கு விரைவில் பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பலாலி படைத்தளத்தில் நடைபெற்ற விசேட மாநாட்டில் இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

குடாநாட்டில் எரிபொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினை அடுத்து வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்தைச் சீராக்கும் வகையில் எரிபொருள் விநியோக அட்டைகள் விநியோகிக்கப்பட்டமை தெரிந்ததே.

இவ்வாறு விநியோகிக்கப்பட்ட எரிபொருள் அட்டைகள் ஒவ்வொன்றுக்கும் முதல் கட்டமாக இரண்டு லீற்றர் பெற்றோல் வழங்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு பலாலியில் நடந்த மாநாட்டில் பணிப்புரை விடுக்கப்பட்டதாக தகவல் ஒன்று தெரிவித்தது.

குடாநாட்டில் எரிபொருள் விநியோகத்தைச் சீராக்கும் வகையில் புதிதாக இரண்டு பவுஸர்களை உடனடியாக யாழ்ப்பாணம் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி உறுதிமொழி அளித்தார் என்றும் - அந்தத் தகவல் மேலும் தெரிவித்தது.

எரிபொருளை சேமித்து வைப்பதற்கு காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் உள்ள எரிபொருள் தாங்கிகளை பயன்படுத்துவது என்றும் பலாலி மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## பொத்துவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹக்கீம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் நேற்று பொத்துவில் சம்பவம் தொடர்பாக மிகவும் காரசாரமாக உரையாற்றினார். அச்சமயம் நாடாளுமன்றத்திற்குத் திடீர் விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்குள்ள தமது அலுவலகத்திலிருந்து ஹக்கீமின் உரையைச் செவிமடுத்துள்ளார்.

ஹக்கீம் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் மதிய போசன நேரம் (பிற்பகல் 12.30) நெருங்கியதால் மதிய போசனத்தின் பின் தொடர்வதற்காக அவர் உரையை இடைநிறுத்தினார் -

அந்த இடைப்பட்ட வேளையில் ஹக்கீமைச் சந்தித்து உரையாடியுள்ளார் ஜனாதிபதி. ஹக்கீமின் உரையைத் தாம் செவிமடுத்தார் என்றும் இதுபற்றி அவருடன் பேச ஹக்கீமுக்குத் திகதி ஒதுக்கித் தருவார் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஹக்கீமிடம் கூறியுள்ளார்.

மதிய போசன இடைவேளை முடிந்து பேச்சைத் தொடர்வதற்கு முன்னதாக இந்த விடயத்தை ஹக்கீம் கூறினார். (க)

## நிலாவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமுகம் புவனேந்திரன் (வயது-30) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச் சூட்டுச் சம்பவம் பற்றிய விசாரணைகளை குச்சவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## பேச்சு மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மூலம் இலங்கைத் தீவில் அமைதியை உருவாக்கமுடியும். அந்நாட்டிலிருந்து மக்கள் அகதிகளாக வெளியேறும் நிலைமை தவிர்க்கப்படும் - என்றார் அவர். (ஐ)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாக ஆயர்களை மதகுருமார்களை ''வணக்கத்திற்குரிய'' என்ற அடைமொழியிலேயே அழைப்பர். ஆனால் விமல் வீரவன்ஸ வெறுமனே இராயப்பு ஜோசப் என்று அழைத்துள்ளார். அத்துடன் அவர் ஒரு விடுதலைப்புலி அல்லது புலிகளுக்கு உதவும் ஒருவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றார் ஜோன் அமரதுங்க.

இது கத்தோலிக்க மக்களைப் புண்படுத்தும் செயலாகும். எனவே விமல் வீரவன்ஸ கத்தோலிக்கரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் ஜோன் அமரதுங்க கேட்டுள்ளார்.

# முற்பிறப்பு பற்றிக்கூறும் நீர்கொழும்புச் சிறுவன்!

## யாழ்ப்பாணத்தில் பெண்ணாக வாழ்ந்தானாம்!

கொழும்பு, செப்.29

நீர்கொழும்பைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவன் முற்பிறப்பில் தான் யாழ்ப்பாணத்தில் ஒரு பெண் பிள்ளையாக வாழ்ந்தான் என்று கூறிவருவது உறவினர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனது பெயர் ராஜி என்றும், யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தான் என்றும் இச்சிறுவன் கூறுகிறான்.

கந்தானை வித்தியாலோக மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இந்த மாணவன் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் யுத்தம் தொடர்பாகப் பல கதைகளைக் கூறிவருகிறான் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெண்களுக்கான பாடசாலை சீருடையை அணிய விரும்புவதாக அவன் கேட்டிருக்கிறான்.

இச் சிறுவனின் செயல்தொடர்பாக பாடசாலை அதிபர் நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்தச் சிறுவனின் பெற்றோர் சிங்களவர்கள். இவர்கள் கட்டாஹன கபலகாய் சந்தி பகுதியில் வசித்து வருகின்றனர். 13 வயதான லக்ஷ்மன் அரவிந்த என்ற இந்தச் சிறுவனுக்கு சகோதரர் ஒருவர் உள்ளார். ஆனால், தனது சகோதரன் யார் என்பது தனக்குத் தெரியாதென அவன் மறுத்துள்ளான்.

முற்பிறவியில் தான் ஒரு தமிழ் பெண்பிள்ளையென்றும் தனது தகப்பனாரின் பெயர் ராமச்சந்திரன் ரமேஷ்குமார் என்றும் தாயின் பெயர் ராசாத்தி ராமச்சந்திரன் எனவும் தெரிவித்துள்ளான்.

நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸ் நிலைய சிறுவர் நலப் பிரிவு அதிகாரி இது குறித்து விளக்கமளிக்கையில், இச்சிறுவன் 12 வருடங்களுக்கு முன்னர் தான் கொல்லப்பட்டான் என்றும் யாழ்ப்பாணம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவிலுக்கு அருகில் வசித்து வந்தான் எனவும் கூறினான் என்று தெரிவித்தார்.

தனது தந்தை பிரிந்துசென்ற நிலையில் தனது தாய், தன்னையும் தனது சகோதரனையும் அழைத்துக்கொண்டு நீர்கொழும்பு பிரதேசத்தில் சென்று வசித்ததாகவும், பின் தாயார் வெளிநாடு சென்றவுடன் தானும் தனது சகோதரனும் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றதாகவும் தெரிவித்துள்ளான். மீண்டும் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவேளையில் யுத்தத்தில் தான் கொல்லப்பட்டதாக இச்சிறுவன் கூறியிருக்கிறான். (ஐ)



இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் டேவிட் முல்போர்ட் தமிழக முதல்வர் கருணாநிதியை நேற்றுச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## பிரபாகரனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணிறச் சால்வைகளைத் தமது ஆசீர்வாதத்தின் அடையாளமாக வழங்குவது வழக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் கிளிநொச்சி சென்றிருந்த சமயம் அங்கு வைத்து விடுதலைப் புலிகளின் தலைவருக்கு வெண்ணிறச் சால்வை ஒன்றை ரவிசங்கர் பரிசாகக் கொடுத்தார் என்று குருவின் பேச்சாளர் ஒருவர் பெங்களூரில் உள்ள 'வாழும் கலை' நிறுவகத்தின் தலைமையகத்தில் வைத்து தெரிவித்தார்.

சமாதானத்தின் அடையாளமாகவும் குறிப்பிடத்தக்க வெண்மை நிறச்சால்வையை குரு ரவிசங்கர் பிரபாகரனிடம் நேரடியாக வழங்கினாரா அல்லது அவரது பிரதிநிதிகள் எவரிடமாவது கொடுத்தாரா என்பதை குரு ரவிசங்கரின் பேச்சாளர் தெரிவிக்கவில்லை.

''இதுபற்றி மேலதிகமாக எதனையும் கூற முடியாது. இது மிகவும் உள்ளார்ந்த ஒரு விடயம்'' என்று அப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

குரு ரவிசங்கர் கொழும்பில் இருந்து கிளிநொச்சி செல்வதற்கு இலங்கை அரசு ஹெலிகொப்டர் வசதியை வழங்கி இருந்தது. கிளிநொச்சியில் பெரும்பாலும் அவர் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்திருக்கக்கூடும் என்று நம்பப்படுவதாக ஐ.ஏ.என்.எஸ். செய்தி தெரிவிக்கின்றது.

இதேவேளை -

குரு ரவிசங்கருடன் வாழும் கலை நிறுவனத்தின் இலங்கை இணைப்பாளர் சத்ஜோயதாவும் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

''சமாதான முயற்சிகளில் இந்தியா ஒரு பெரும் பங்கை வகிக்க முடியும் என்பதை குரு ரவிசங்கர் பிரஸ்தாபித்தார். அந்த யோசனையை அவர்கள் (விடுதலைப் புலிகள்) ஆதரித்தார்கள்'' - என்று சத்ஜோயதா கூறினார்.

''இது ஓர் ஆரம்பம்தான். நாங்கள் பல விடயங்கள் குறித்துக் கருத்துக்களைப் பரிமாறினோம். முழு விடயங்களையும் விவாதித்தோம். யோசனைகளைப் பரிமாறினோம். தாங்கள் நிபந்தனைகள் எதுவும் இன்றி சமாதானப் பேச்சுக்கு வரவிரும்புகின்றனர் என்று விடுதலைப் புலிகள் எங்களிடம் தெரிவித்தனர்'' - என்றும் சத்ஜோயதா கூறினார் என்று 'ஐ.ஏ.என்.எஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## யுத்த நிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர்க், மாவிலாறு அணைக்கட்டை மூடியதன் காரணமாகத் தொடர்ந்து அப்பகுதியில் ஏற்பட்ட மோதல்களினாலும் விடுதலைப் புலிகள், யுத்தநிறுத்தத்தை மீறியிருக்கின்றார்கள் என்றும், சம்பூர்ப் பகுதியில் அரச படையினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் அவர்களும் யுத்த நிறுத்தத்தை வன்மையாக மீறியிருக்கின்றார்கள் எனவும் - கூறியிருக்கின்றார்.

திருகோணமலையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மூதூர் பகுதியில் வலிந்த தாக்குதலை நடத்தியமை புலிகள் புரிந்த யுத்த நிறுத்த மீறல். சம்பூர் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் மீது அரச படைகள் தாக்குதல் நடத்தியமை அரச படைகள் புரிந்த யுத்தநிறுத்த மீறல்.

அரச படைகள் மீது யாழ்ப்பாணத்தில் புலிகள் மேற்கொண்ட வலிந்த தாக்குதல்கள் புலிகளால் அளிக்கப்பட்ட யுத்தநிறுத்த மீறல்கள் ஆகும். அதேபோன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில், அரச படைகள் நடத்திய வலிந்த தாக்குதல்களும், முகமாலை கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் மீது அரச படைகள் வலிந்து தாக்குதலை நடத்தியமை, அப்பகுதிக்குள் ஊடுருவியமை அரசாங்கத்தின் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

மோதல் இடம்பெற்ற பகுதிகளுக்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் செல்ல அனுமதி அளிக்காதது, சுயாதீன விசாரணைகளுக்கு இடமளிக்காதது இரண்டு தரப்பினரும் இழைத்த யுத்தநிறுத்த மீறல்கள் என கண்காணிப்புக் குழு குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குள் உட்செல்லவும், வெளியேறவும் சிவிலியன்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் கட்டுப்பாடுகளை விதித்தமை இருதரப்பினரும் புரிந்த யுத்த நிறுத்த மீறல் என்றும் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஐ-12)

## நோர்வேயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட சமாதானத் தூதுவரின் வருகையையடுத்து, நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் காணப்படுமிடத்து, நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், நோர்வேயின் மூத்த சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வருவார் எனவும் தெரிய வருகிறது. அவர் கிளிநொச்சிக்குச் சென்று தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள், மேலும் காலம் தாழ்த்தாது முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை இந்தியா உட்பட முழு சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த புதன்கிழமை, வாஷிங்டனில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமொன்று நடந்தது. இலங்கையில் தொடரும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது. வன்செயல்கள் காரணமாக இந்த வருடத்தில் மட்டும் நூற்றுக் கணக்கான சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர் என்ற விடயமும் கவனத்தில் எடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தின் பெறுபேறாகவே நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவர் மற்றும் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரின் இலங்கை விஜயத்துக்கான ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன.

தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய சர்வதேசத் தலைவர்கள் வரிசையில் கடைசியாகச் சந்தித்தவர் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் என்பது கவனிக்கத்தக்கது. இவர் கடந்த ஜனவரியில் பிரபாகரனை சந்தித்துப் பேசியிருந்தார்.(உ)

## இரண்டாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை அணிந்தவாறு நேற்றும் இரண்டாவது நாளாக நாடாளுமன்றில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் நாடாளுமன்றம், சபாநாயகர் டபிள்யூ.ஜே.ஏ. லொக்கு பண்டாரவின் தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான வினா முடிந்ததும் 10.20 மணியளவில் அமைச்சர் சரத் அமுனுகம விவாகம், பிறப்பு, இறப்புப் பதிவுகள் தொடர்பான சட்டமூலத்தை சபையில் விவாதத்திற்காகச் சமர்ப்பித்து அது மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்த வேளையில், ஆசனத்திலிருந்து திடீரென எழுந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பின்வருமாறு கூறினார்.

"வடக்கில் நிலவுகின்ற அசாதாரண நிலைமை மற்றும் பொருளாதாரத் தடை போன்றவற்றை நீக்கக் கோரியும், ஏ-9 உட்பட வடக்கு - கிழக்கிலுள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் தொடர்புபடுத்துகின்ற அனைத்து வீதிகளையும் திறக்கக் கோரியும் நேற்று (அதாவது புதனன்று) விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு நாம் நாடாளுமன்றில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அதற்கான சாதகமான பதிலை அரசு இன்னும் எமக்குக் கூறவில்லை.

அதன் காரணமாக இன்றும் (அதாவது நேற்று) நாம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். எமது கோரிக்கை தொடர்பாக சாதகமான பதிலை அரசு அளிக்கும் வரை நாடாளுமன்றில் எமது சத்தியாக்கிரகப் போராட்டம் தொடரும்.'' - என்று கூறினார்.

அவ்வாறு அவர் கூறி முடித்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைவரும் கறுப்புப் பட்டிகளைக் கழுத்தில் அணிந்தவாறு சபாநாயகர் முன்னே வந்து நிலத்தில் அமர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் போல் நேற்றும் மிகவும் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்தினால் சபை நடவடிக்கைகள் பாதிக்கப்படவில்லை. பிற்பகல் 4.30 மணிவரை சபை நடவடிக்கைகள் ஒழுங்காக இடம்பெற்றன.

கூட்டமைப்பினரின் போராட்டம் காலை 10.20 மணி முதல் சபை நடவடிக்கை முடியும் நேரமான 4.30 மணி வரை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org